**செய்தி வெளியீடு எண். 115** **நாள்: 23.02.2018**

**<u>மாவட்ட ஆட்சியர் தலைமையில் மேல்நிலைத் தேர்வு பணிகள் தயார் நிலை</u>**

தேர்வினை நன்முறையில் நடத்த திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கத்தில் 23.02.2018 அன்று வருவாய்த்துறை, காவல்துறை, போக்குவரத்து துறை, மின்வாரியத்துறை மற்றும் கல்வித்துறை அலுவலர்களுடன் மேல்நிலை, இடைநிலை அரசுப் பொதுத் தேர்வுக்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட தேர்வுக்குழு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வுகள் 01.03.2018 முதல் 06.04.2018 வரையிலும் மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வுகள் 07.03.2018 முதல் 16.04.2018 வரையிலும் நடைபெறவுள்ளது. இத்தேர்வில் மேல்நிலை இரண்டாமாண்டில் 20,934 ஆண்களும், 23,191 பெண்களும் ஆக மொத்தம் 44,125 தேர்வர்களும், மேல்நிலை முதலாமாண்டில் 20,188 ஆண்களும், 22,739 பெண்களும் ஆக மொத்தம் 42,927 தேர்வு எழுதவுள்ளனர். இத்தேர்வுகளுக்கு 113 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. சிறைவாசிகளின் வசதிக்காக புழல் மத்திய சிறையில் தனித்தேர்வர் மையம் ஒன்று அமைக்கப்பட்டு, இம்மையத்தில் 116 சிறைவாசிகள் தேர்வெழுதவுள்ளனர். மேல்நிலைத் தேர்விற்காக வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களாக இம்மாவட்டத்தில் 17 கட்டுக்காப்பு மையங்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு கட்டுக்காப்பு மையத்திற்கும் இரண்டாமாண்டு மற்றும் முதலாமாண்டுக்கு தனித்தனியாக அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் ஒருவரும் மூத்த முதுகலை ஆசிரியர் ஒருவரும் நியமனம் செய்து ஆக மொத்தம் 68 வினாத்தாள் கட்டுக்காப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இம்மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 113 தேர்வு மையங்களுக்கும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களை முதன்மைக் கண்காணிப்பாளர்களாகவும், மூத்த முதுகலை ஆசிரியர்களை துறை அலுவலர்களாகவும் அனைத்து தேர்வு மையங்களுக்கும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தேர்வர்களின் எண்ணிக்கை 400-க்கும் அதிகமாக உள்ள மையங்களுக்கு கூடுதல் முதன்மைக் கண்காணிப்பாளர்களும், கூடுதல் துறை அலுவலர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மாற்றுத்திறனாளிகள் மற்றும் நரம்பியல் குறைபாடு காரணமாக பாதிக்கப்பட்ட தேர்வர்களுக்கு தேர்வு எழுத சலுகையாக கூடுதல் ஒருமணிநேர சலுகை 176 மாணவர்களுக்கும், சொல்வதை எழுதுவோர் சலுகை 125 மாணவர்களுக்கும் அரசுத் தேர்வுகள் இயக்குநரால் அனுமதி வழங்கப்பட்டு சம்பந்தப்பட்ட மாவட்ட கல்வி அலுவலர் மூலமாக சொல்வதை எழுதும் ஆசிரியர் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

அனைத்து தேர்வு மையங்களுக்கும் 20 தேர்வர்கள் கொண்ட ஓர் அறைக்கு ஓர் அறை கண்காணிப்பாளர் வீதம் 2306 அறை கண்காணிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தேர்வர்கள் ஒழுங்கீனச் செயல்களை தடுக்கும் பொருட்டு 74 பறக்கும் உறுப்பினர்களும், 250 நிரந்தரப்படை உறுப்பினர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதுதவிர மாவட்ட ஆட்சியரால் நியமனம் செய்யப்படும் வருவாய்த்துறை மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் தேர்வு மையத்தினை திடீர்பார்வை மேற்கொள்வர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**